රාජ්‍ය පරිපාලන, පළාත් සභා සහ පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ **07,** ශ්‍රී ලංකාව.

இணைந்த சேவைகள் பிரிவு
சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.

Combined Services Division
Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතනය
தொலைபேசி: **011- 2694560**
Telephone

ෆැක්ස්
தொலைநகல்: **011- 2692254**
Fax

ඊ- මේල්
மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk**
E-mail

වෙබ් අඩවිය
இணைத்தளம்: **www.pubad.gov.lk**
Web Site

මගේ අංකය
எனது இல
My No R/10/2026

ඔබේ අංකය
உமது இல
Your No

දිනය
திகதி:
Date 2026.11.23

இணைந்த சாரதிகள் சேவையின் தரம் *III* ற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - *2026*

நியமனம் வழங்குதல் மற்றும் பயிற்சிப் பட்டறை

*பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2026 மே மாதம் 17 ஆம் திகதி நடாத்தப்பட்ட மேற்படி போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய, 2026 செப்டம்பர் மாதம் 05, 06, 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் இடம்பெற்ற பொது நேர்முகத் பரீட்சை மற்றும் தொழில்முறைப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் **2026.12.15** ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இணைந்த சாரதிகள் சேவையின் III ஆம் தர நியமனத்திற்காகத் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரர்களின் பெயர்ப்பட்டியல் இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

*02. குறித்த விண்ணப்பதாரர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்குதலும், அரச உத்தியோகத்தர் என்ற வகையிலும் இணைந்த சாரதிகள் சேவையின் நியமனம் பெற்ற உத்தியோகத்தர் என்ற வகையிலும் ஒப்படைக்கப்படும் கடமைகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் பணிகள் தொடர்பான பயிற்சிப் பட்டறையொன்று **2026 டிசம்பர் மாதம் 05** ஆம் திகதி **மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை இல. 150, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03 இல்** அமைந்துள்ள **அலரி மாளிகையில்** நடாத்தப்படவுள்ளதுடன், அதற்கான அழைப்புக் கடிதங்கள் தபால் மூலம் தகுதி பெற்றுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

03. நியமனம் வழங்குதல் மற்றும் பயிற்சிப் பட்டறைக்கு வருகை தருவதற்கான அறிவுறுத்தல்கள்

*i. சகல நியமனதாரிகளும் **முற்பகல் 8:00** மணிக்கு மண்டபத்தின் ஆசனங்களில் அமர்ந்திருக்க வேண்டும்.*

ii. அனைத்து நியமனதாரர்களும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக இவ் அழைப்புக் கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ஆகியவற்றை கட்டாயமாகக் கொண்டு வர வேண்டும்.

*iii. வைபவ மண்டபத்துக்குள் உள் நுழைய **நியமனதாரிகள் மட்டுமே** அனுமதிக்கப்படுவர் என்பதை கவனத்தில் கொள்ளவும். உடன் வருபவர்களுக்கு வசதிகளை வழங்குவது கடினம் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.*

iv. இந்த நிகழ்வில் கலந்து கொள்கின்ற உத்தியோகத்தர்கள் சேட், காற்சட்டை அல்லது தேசிய உடை போன்ற பொருந்தக்கூடிய வகையிலான உடையுடன் வருகை தர வேண்டும்.

v. பிரயாணப் பொதி மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் ஆகியவற்றை வைபவ மண்டபத்துக்குள் கொண்டுவர அனுமதி வழங்கப்படமாட்டாது ஆகவே அவற்றைக் கொண்டு வருவதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஒப்பம்/: என்.யூ. நிஷான் மெண்டிஸ்
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்